Government of Western Australia
Mental Health Commission

## பின்வருவனவற்றிற்கு உங்களுக்கு உரிமை உண்டு:

- உங்கள் உரிமைகள் பற்றித் தகவல் பெறவும், உங்களுக்கு வழங்கப்படும் ஏதாவது சிகிச்சைபற்றி முற்றாக அறிந்துகொள்ளவும் உங்கள் கேள்விகளுக்கு பதில் கிடைக்கவும்
- வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒரு உடல் பரிசோதனைக்கு
- ஒரு மனநோய் மருத்துவருடன் நேர்காணல் செய்வதற்கு
- உங்களுக்குத் தேவையற்ற சிகிச்சையை மறுப்பதற்கு
- எந்த வேளையிலும் மருத்துவமனையை விட்டு வெளியேற
- நியமிக்கப்பட்டவரின் பெயரைக் குறிப்பிடுவதற்கு (‘நியமிக்கப்பட்ட நபர்கள்” பிரசுரத்தைப் பார்க்கவும்)
- அஞ்சல், தொலைபேசி அல்லது மின்னியக்கம் மூலம் மக்களுடன் தொடர்பு கொள்ளவும், வருகை தருவிக்கவும் ( இந்த உரிமை அதிகாரமளிக்கப்பட்ட வைத்தியசாலைகளில் மட்டுப்படுத்தப்படலாம்)
- தனித்துவம் மற்றும் அந்தரங்கம்
- உங்கள் மருத்துவ அறிக்கைகளைப் பார்வையிடுவதற்கு (இந்த உரிமை மட்டுப்படுத்தப்படலாம்)
- நீங்கள் வைத்தியசாலையில் இருக்கும்போது உங்கள் சொந்தச் சாமான்களை பாதுகாப்பாக வைப்பதற்கு
- உளநல சேவைக்கு அல்லது சுகாதார மற்றும் இயலாமை சேவைகள் முறைப்பாடுகள் காரியாலயத்திற்கு ( HaDSCO ) ஒரு புகாரைச் செய்வதற்கு (தொ:1800 813 583)
- நீங்கள் ஒர் அதிகாரம் பெற்ற வைத்தியசாலையில் ஒரு நீண்டகால தன்னார்வ நோயாளியானால், உளநல தீர்ப்பாயத்தினால் உங்கள் விடயத்தை மீளாய்வு செய்விக்க (தொ: 08 6145 3900)

## மேலும் தகவல்கள்

இந்தப் பிரசுரத்திலுள்ள தகவல்கள் , உள நல சட்டம் 2014 (*Mental Health Act 2014*) இல் வெளியிடப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடையவை. பின்வரும் ஒரு தொகுதி துண்டுப் பிரசுரங்களில் இந்தச் சட்டத்தைப் பற்றிய தகவல்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:

- பரிசோதனை ஒன்றிற்காக மனநோய் வைத்தியருக்குச் சிபாரிசு செய்தல்
- தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளருக்கான வழிமுறைகள்.
- சமூகச் சிகிச்சை வழிமுறைகள்
- தானாக விரும்பி வரும் நோயாளருக்கான தகவல்கள்
- மன வருத்தத்திற்கான மருத்துவத்தைப் பெறுதல்
- தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்கள்
- நியமிக்கப்பட்டவர்கள்: நியமனம் செய்வது எவ்வாறு அத்துடன் அதன் அர்த்தம் என்ன.

## ஏனைய பிரசுரங்கள் கிடைக்குமிடம்:

- உள நல நியாய மன்று
- உள நல ஆதரவு சேவை
- உள நல சட்ட நிலையம்

உளநல சட்டம் 2014 பற்றி அதிக தகவல்களுக்கும், ஏனைய வழி வகைகளுக்கும் வருகை தரவும், மன நல ஆணைய இணையத்தளம்: www.wa.gov.au
or phone (08) 6272 1200

This document can be made available in other languages and alternative formats on request.

Published by the Mental Health Commission (2015)

# தாமாக விரும்பிவந்து வைத்தியசாலையிலிருக் கும் நோயாளருக்கான தகவல்கள்



**ஒரு வைத்தியசாலையில் நீங்களாக விரும்பி வந்து மன நோய்க்குச் சிகிச்சை பெற்றுக்கொண்டுவருகிறீர்களானல், உங்களது உரிமைகள் யாவை மற்றும் நீங்கள் எதனை எதிர்பார்க்க முடியும் என்பது பற்றிய தகவல்களை இந்தத் துண்டுப் பிரசுரம் வழங்குகிறது.**

## வைத்தியசாலையில் தன்னிச்சையான நோயாளியாக வருதல்

பின்வருவம் காரணத்திற்காக நீங்கள் ஒரு தன்னிச்சையான நோயளராக அனுமதிக்கப்பட்டிருந்தால்:

- ஒரு வைத்தியசாலையில் உங்களுக்குக் கிடைக்கும் சிகிச்சை, கவனிப்பிலிருந்து நீங்கள் நன்மையடைவீர்களென ஒரு மனநோய் மருத்துவர் நம்பினார், அத்துடன்
- நீங்கள் (அல்லது உங்கள் சார்பாக சம்மதம் தெரிவிக்கக்கூடிய , பாதுகாவலர் போன்ற ஒருவர்) அனுமதிக்கப்படுவதற்குச் சம்மதித்தார்.

## நீங்கள் எதனை எதிர்பார்க்கலாம்?

மருத்துவமனைப் படுக்கையில் இருக்கும் நோயாளர்களில் நீங்கள் ஒருவராவீர்கள் அத்துடன் மருத்துவமனைப் பிரிவிலே வசிப்பதற்கான நாளாந்த வாழ்க்கை முறைகளையும், ஒழுங்குவிதிகளையும் ஊழியர்கள் விபரிப்பார்கள். நீங்கள் வைத்தியசாலையில் இருக்கும்போது, ஒரு மன நோய் மருத்துவரையும் அத்துடன் உளவியல் நிபுணர்கள், சமூக சேவையாளர்கள், தொழில்சார் சிகிச்சையாளர்கள், தாதிகள் போன்றோரைக் காண்பீர்கள். உங்கள் உள நோய்க்குச் சிறந்த சிகிச்சை, பராமரிப்பு யாவையெனக் கண்டறிவதற்காக, ஒரு பூரணமான உடல், உள மதிப்பீடொன்றைப் பெறுவீர்கள்.

## நீங்கள் பெறக்கூடிய சிகிச்சை என்ன?

மருந்துகள் அதேபோல் தொழில்சார் சிகிச்சை, தனியாகவோ அல்லது குழுவாகவோ உளநல ஆலோசனை, உளவியல் திட்டங்கள் அத்துடன் மின்தூண்டல் அதிர்ச்சி வைத்தியம் போன்றவை இந்தச் சிகிச்சையில் அடங்கலாம்.

தன்னிச்சையான நோயாளராக இருப்பதானது தகவலைப் பெற்றுக்கொண்டு வழங்கும் உ ங்களின் ( அல்லது உங்கள் சார்பாகச் சம்மதம் அளிக்கக்கூடிய ஒரு பாதுகாவலர் போன்ற ஒருவர்) சம்மதம் இல்லாமல், சிகிச்சையழிக்கப்படமாட்டாது எனப் பொருள்படும்.

## தகவலறிந்த சமமதம் அளிக்கக்கூடியவராக இருப்பதற்கு நீங்கள்:

- உங்கள் சிகிச்சையைப் பற்றிய, மாற்றுச் சிகிச்சைபற்றிய விளக்கம் அத்துடன் ஏதாவது அபாயங்கள் பற்றிய எச்சரிக்கைகளை விளங்கிக்கொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும்.
- உங்களது சிகிச்சைத் தீர்மானங்களிலே அடங்கியுள்ள விடயங்களை விளங்கிக்கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.
- உங்களது சிகிச்சை முடிவுகளின் விளைவுகளை விளங்கிக்கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.
- உங்கள் தீர்மானத்தில் ஈடுபடுத்திய விடயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கக்கூடியவராக இருக்க வேண்டும்.
- உங்கள் முடிவைத் தெரிவிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

இந்தத் தகவலை ஆலோசிப்பதற்கும், கேள்வி கேட்பதற்கும் மேலதிக தகவல் மற்றும் ஆலோசனையை வேண்டுவதற்கும் உங்களுக்குப் போதிய அவகாசம் தரப்பட வேண்டும்.

நீங்கள் சிகிச்சையளிப்பதனை எதிர்த்தால் அத்துடன் உங்கள் உயிரைப் பாதுகாக்க அல்லது நீங்கள் உங்களுக்கோ அல்லது ஏனையோருக்கோ உடல் ஊறு விளைவிப்பதைத் தடுக்க சிகிச்சை அவசியமானதென ஊழியர்கள் உணர்ந்தால், உங்கள் சம்மதமின்றி உங்களுக்குச் சிகிச்சை தரப்படலாம். இது அவசரகால மனநோய்ச் சிகிச்சையென அழைக்கப்படும்.

## வைத்தியசாலையை விட்டு வெளியேறிப் போதல்

ஒரு தன்னார்வ நோயாளியாதலால், நீங்கள் விரும்பிய நேரம் வைத்தியசாலையை விட்டு வெளியேறலாம் அல்லது உங்கள் மன நோய் மருத்துவர் உங்களை வெளியேற்றலாம். நீங்களாகவே வெளியேற விரும்பினால், முதலில் நீங்கள் அது குறித்து மன நோய் மருத்துவருடனும், ஏனைய ஊழிய உறுப்பினருடனும் கலந்துரையாடுவது அவசியம்.

## உங்கள் விருப்பத்திற்கு மாறாக மருத்துவமனையில் உங்களை வைத்திருக்க முடியுமா?

மருத்துவ ஆலோசனைக்கு மாறாக நீங்கள் வைத்தியசாலையை விட்டு வெளியேற விரும்பினால் மற்றும் உங்களுக்குக் கட்டாய சிகிச்சை விதி முறை தேவைப்படலாமாவென, ஒரு வைத்தியர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உளநல வைத்தியர்( ஒரு உயர் தகைமை பெற்ற உள நல மருத்துவர்) நினைத்தால், 1ஏ படிவத்தில் உங்களை ஒரு மன நோய் மருத்துவரின் பரிசோதனைக்காக சிபாரிசு செய்யலாம்.

நீங்கள் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவமனையில் இருந்தால் (கட்டாய நோயாளர்களையும் அனுமதிக்கும் வைத்தியசாலை), வைத்தியர்/ மருத்துவர் உங்களை ஒரு மன நோய் மருத்துவரிடம் சிபாரிசு செய்ய வேண்டுமா இல்லையாவெனத் தீர்மானிப்பதற்காக 6 மணித்தியாலங்கள் வரை நீங்கள் வெளியேறாமல் தடுக்கப்படலாம்.

பரிசோதனையில், உங்களுக்குக் கட்டாய சிகிச்சை தேவையா இல்லையாவெனத் தீர்மானிப்பதற்கு ஒரு மன நோய் மருத்துவர் பின்வரும் தகைமைகளை ஆராய்ந்து பார்ப்பார்.

- உங்களுக்குச் சிகிச்சை தேவைப்படும் மன நோய் இருக்கிறதா?
- நீங்கள் சிகிச்சை பெறாது விட்டால், உங்களுக்கோ அல்லது இன்னொருவருக்கோ ஒரு குறிப்பிட்ட ஆபத்து உண்டா?
- சிகிச்சை குறித்து முடிவெடுக்கக் கூடியளவு நலமாக இருக்கிறீர்களா?
- கட்டாய சிகிச்சையன்றிச் குறைந்தளவிலான மட்டுப்பாடுகளுடன் சிகிச்சை வழங்குவதற்கான வழி இருக்கிறதா?

ஒரு கட்டாய நோயாளராக இருப்பதற்கு வேண்டிய தகைமைகளை நீங்கள் கொண்டிராவிட்டால், நீங்கள் விட்டுச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.